Crl.Misc.39

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

## IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.I, KARUR

CC No. 274/2023

| | | |
|---|---|---|
| | | Prosecution PW 5 |
| Deposition of Witness for | | Defence |
| | | Court |
| Name | : | கண்மணி |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| District | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1969 of the day of 14.03.2024

**எதிரி ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் கரூரில் குடியிருந்து தீபம் கலர்லேபில் வேலை செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் ச/பி 65 பி சான்றிதழிதலில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். தேதி மாதம் வருடம் சரியாக ஞாபகமில்லை. சண்முகம் என்பவர் செல்லிலிருந்து

S/d K. Ambiga
நீதித்துறை நடுவர் எண்.1,
கரூர்.

போட்டோவை டெவலப் செய்து கொடுக்கும்படி கூறினார். என்னிடம் காட்டப்படும் போட்டோக்கள் நான் டெவலப் செய்து கொடுத்த போட்டோக்களாகத்தான் இருக்கும். மூன்று போட்டாக்கள் டெவலப் செய்து கொடுத்தேன். போலிசிடம் போட்டோ என்னால் டெவலப் செய்யப்பட்டது என்பதற்காக நான் சான்றிதழ் கொடுத்தேன். என்னிடம் சொன்றிதழ் நான் கொடுத்ததுதான். ச/பி65 பி சான்றிதழ் அ.சா.ஆ.3 என்று குறிபிடப்படுகிறது. போலிசார் என்னை விசாரித்தனர்.

**குறுக்கு விசாரணை**

தீபம் கலர்லேபில் 2019 பாதியிலிருந்து நான் போட்டோவை டெவலப் செய்வது மற்றும் இதர பணிகளை செய்துவரும் மாத சம்பள பணியாளர். தீபம் கலர் லேப் தனிப்பட்ட நபரான சுஜாதா என்பவருக்கு சொந்தமானது. சங்கர் என்பவர் அதை நிர்வகித்து வருகிறார். தீபம் கலர் லேப்பில் நான் பார்ட்னராக இல்லை. போட்டோக்களை மென்பொருளில் சேமித்து வைப்பது பற்றி எனக்கு அதிகம் தெரியாது கொடுப்பதை டெவலப் செய்து தருவேன். சண்முகம் என்பவர் வயதானவரா நடுத்தர வயதானவரா என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. சண்முகம் செல்போனை கொடுத்து அதிலுள்ள போட்டோவை டெவலப் செய்து கொடுக்க சொன்னார். கருப்பு வெள்ளை போட்டோவை கொடுத்து அதை கலர் போட்டாவாக மாற்றி கொடுக்க முடியுமா என்றால் முடியும். போட்டோவை எப்படி டெவலப் செய்தேன் என்று கேட்டால் சிம்மை கம்யூட்டரில் போட்டு டெவலப் செய்து கொடுத்தேன். போனையும் எடுத்து வந்தார். சண்முகம் நீதிமன்றத்தில் தான் மெம்மரி கார்டை எடுத்து வந்து கொடுத்து டெவலப் செய்ததாகவும், போனை எடுத்து செல்லவில்லை என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. போன் கையில் வைத்திருந்தார். கம்யூட்டரை நான் ரெகுலராக பயன்படுத்துவது கிடையாது என்றும், போலீசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க நான் ச/பி65 பி சான்றிதழை கொடுத்தேன் என்றால் சரியல்ல. கவர் போட்டோவை என்னிடம் கொடுத்து ஸ்கேன் செய்து பிரிண்ட் எடுத்து கொடுத்துள்ளேனா என்றால் சரியல்ல.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

S/d K. Ambiga
நீதித்துறை நடுவர் எண்.1,
கரூர்.